அ.வ.எண்.170/2022 /ப.எண். 2/ நாள் -23-09-2024

சாட்சி- வா.சா.1- கண்ணன்

வாதி ஆஜர். சமூகநீதிமன்றத்தால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.

குறுக்கு விசாரணை :- (1 ம் பிரதிவாதி தரப்பில்)

நான் எம்.ஏ, எம்.பில் , பி.எச்.டி படித்துள்ளேன். நான் அரசு கலைக் கல்லூரியில் 2006 லிருந்து கடந்த 20 வருடமாக கௌரவ விரிவுரையாளராக பணிபுரிகிறேன். நான் வேடுகாத்தாம்பட்டி சின்னாயூரில் உள்ள எனது பழைய வீட்டில் கடந்த 50 வருடமாக குடியிருந்து வருகிறேன். கடந்த 4 வருடமாக ஓமலூரில் குடியிருக்கிறேன். வழக்கு தாக்கல் செய்த காலத்திலிருந்து தாவாவில் உள்ள முகவரியில்தான் வசித்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். 10-11-2012 ல் ரூ.3,00,000/- பணம் 1 ம் பிரதிவாதியிடமிருந்து கடன் பெற்றதாக சொல்லப்படுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் இரண்டு சி.எஸ்.ஆர் நகல்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 36 சதவீத வட்டிக்கு 1 ம் பிரதிவாதி கடன் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 20 ரூபாய் வெற்றுத் தாள்கள், 4 வெற்று காசோலைகள், 4 பிராமிசரி நோட்டுக்கள் , வெற்றுத் தாள்கள் ஆகியவற்றை நான் பிரதிவாதிக்கு 10-11-2012 ல் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 05-01-2013 ல் ரூ.30,000/-த்தை வட்டியாக ரூ.3,00,000/-க்கு ரூ.30,000/- பிரதிவாதி கேட்டார் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அக்டோபர் 2017 வரையில் மாதந்தோறும் ரூ.30,000/- கொடுத்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. கடன் வாங்கும் போது என்னென்ன ஆவணங்கள் எழுதி தரவேண்டும் என்று எனக்குத் தெரியும் என்று சொன்னால் சரிதான். கடன் வாங்கும் போது வெற்று காசோலைகள், வெற்று புரோநோட்டுக்கள், வெற்று தாள்கள் ஆகியவற்றை கடனிற்கு ஆதரவாக தருவது தவறு என்று எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. 10-10-2017 ல் ரூ.3,00,000/- கடனுக்கு ரூ.13,80,000/- 1 ம் பிரதிவாதிக்கு நான் கொடுத்திருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

ரூ.13,80,000/-யை யார் மூலமாக எதன் மூலமாக வழங்கினேன் என்றால் இருவரும் நேரடியாக கொடுக்கல் வாங்கல் செய்து கொண்டோம். 10-10-2017 லிருந்து நாளது தேதி வரையில் எவ்வித நடவடிக்கையும் மேற்கண்ட ஆவணங்களை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் நான் நேரடியாக கேட்டேன், ஆனால் தரவில்லை. ஆவணங்களை திருப்பி கேட்டு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு தரவில்லை. பிரதிவாதியின் பதில் சங்கதிகள் எனக்கு தெரியும். ஜெ.எம்.5 நீதிமன்றத்தில் ரூ.30,00,000/- ரூபாய்க்கு 1 ம் பிரதிவாதி காசோலை மோசடி வழக்கு தொடர்ந்துள்ளார் என்று சொன்னால் இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள ஆவண காசோலையை வைத்து வழக்கு தொடர்ந்துள்ளார்.

(குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).